**24.3.2015**

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

## <u>பூச்சிகொல்லித் தொழிலின் வருவாய் ரூ.33,000 கோடியாக அதிகரிக்க வாய்ப்பு</u>




நாட்டில் பூச்சிகொல்லித் தொழிலின் மொத்த வருவாய் ரூ. 33 ஆயிரம் கோடியாக அதிகரிக்க வாய்ப்புள்ளதாக இந்திய பூச்சிகொல்லி தயாரிப்பாளர் சங்கம் தெரிவித்தது. மும்பையில் அச்சங்கத்தின் தலைவர் பிரதீப் தவே வெள்ளிக்கிழமை செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது: கடந்த நிதி ஆண்டு அளவில், இந்திய பூச்சிகொல்லி சாதனங்களின் சந்தை மதிப்பு ரூ. 27 ஆயிரம் கோடியாக உள்ளது. இதில் உள்நாட்டு விற்பனையின் மதிப்பு ரூ. 15 ஆயிரம் கோடி. ஏற்றுமதியான பூச்சிகொல்லி சாதனங்களின் மதிப்பு ரூ. 12 ஆயிரம் கோடியாகும். வரும் நிதி ஆண்டில் உள்நாட்டுச் சந்தையின் மதிப்பு ரூ. 18 ஆயிரம் கோடி யாகவும், ஏற்றுமதிகளின் மதிப்பு ரூ. 15 ஆயிரம் கோடியாகவும் அதிகரிக்க வாய்ப்புள்ளது. அரசின் தவறான கொள்கைகளின் காரண மாக, கடந்த மூன்று ஆண்டுகளாக இந்தத் தொழில் இழப்பைச் சந்தித்து வருகிறது. இதன் மூலம் இத்துறையில் ஈடுபட்டோர் அடைந்த இழப்பின் மொத்த மதிப்பு ரூ. 15 ஆயிரம் கோடியாகும். பன்னாட்டு நிறுவனங்கள் பதிவு செய்யாத பூச்சிகொல்லி மருந்துக் கூறுகளை இறக்குமதி செய்து இங்கு விற்பனை செய்வதை அரசு அனுமதித்து வருகிறது. வெளிநாட்டு பூச்சிகொல்லி நிறுவனங்களுக்கு உள்ள வாய்ப்புகளைப் போலவே

இந்திய நிறுவனங்களுக்கும் சமமான வாய்ப்புகளை அளிக்க அரசு மறுக்கிறது. இதனால், சில வகை பூச்சிகொல்லிகளின் விற்பனையில் பன்னாட்டு நிறுவனங்களுக்கு ஏகபோக உரிமை கிடைக்கிறது. வெளி நாட்டு பூச்சிகொல்லி நிறுவனங்கள் மருந்துக் கூறுகளை இறக்குமதி செய்வதற்கு மத்திய அரசு தடை விதிக்க வேண்டும். பன்னாட்டு நிறுவனங்கள் நம் நாட்டில் செய்து வரும் இறக்குமதிக் குவிப்பைத் தடுக்க வேண்டும். இந்திய பூச்சிகொல்லித் தொழிலில் உற்பத்தி வரியைக் குறைக்க வேண்டும். மேலும், உள்நாட்டுப் பயன்பாட்டு மதிப்புக்கு நிகராக ஏற்றுமதி செய்யப்படுவதால், ஏற்றுமதி வரி குறைக்கப்பட வேண்டும் என்பது இத்தொழிலில் ஈடுபட்டுள்ளோரின் கோரிக்கை என்று அவர் கூறினார்.

**<u>கால்நடை மருந்தகம் திறப்பு</u>**

மதுரை மாவட்டம் சோழவந்தான் தொகுதிக்குள்பட்ட மன்னாடி மங்கலத்தில் செயல்பட்டு வந்த கால்நடை கிளை நிலையத்தை கால்நடை மருந்தகமாக தமிழக அரசு தரம் உயர்த்தி, திங்கள்கிழமை திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்ச்சிக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் சுப்பிரமணியன் தலைமை வகித்தார். சோழவந்தான் எம்.எல்.ஏ. கருப்பையா, மாவட்ட கவுன்சிலர் செல்லப்பாண்டி, ஒன்றிய தலைவர் அன்னக்களஞ்சியம் சுந்தரம், துணை மேயர் திரவியம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கால்நடை மண்டல துணை இயக்குநர் கோபிநாத் வரவேற்றார். கூட்டுறவு துறை அமைச்சர் செல்லூர் கே. ராஜூ குத்து விளக்கேற்றி, புதிய கால்நடை மருந்தகத்தை திறந்து வைத்தார். அவர் பேசுகையில், மதுரை மாவட்டத்தில் பிப்ரவரி வரை 2,15,800 கால்நடைகளுக்கு கால் மற்றும் வாய்காணை நோய் தடுப்பூசிகள் போடப்பட்டுள்ளது. மேலும் 2,11,850 கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில் 4,650 பயனாளிகளுக்கு 4 ஆடுகள் வீதம் 18,720 ஆடுகள் வழங்கப்பட்டுள்ளது. நாட்டுக்கோழி பண்ணை வைக்க அரசு 50 சதவீத மானியத்தில் பயனாளிகளுக்கு நிதி

வழங்கி வருகிறது என கூறினார். இந்நிகழ்ச்சியில் வட்டாட்சியர் ராம்குமார், ஊராட்சித் தலைவர் தங்கப்பாண்டி, உசிலம்பட்டி ஒன்றியத் தலைவர் பஞ்சம்மாள், ஆணையாளர் கண்ணையா, உதவித் தலைவர் முத்தையா, கால்நடை உதவி இயக்குநர்கள் ராஜா, பன்னீர்செல்வம் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

**கொய்யாவுக்கு கூடுதல் விலை: விவசாயிகள் மகிழ்ச்சி**

ராஜபாளையம் பகுதியில் கொய்யாப்பழத்துக்கு இந்த ஆண்டு நல்ல விலை கிடைப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். ராஜபாளையத்திற்கு மேற்கே அய்யனார் கோயில் செல்லும் வழி, தென்றல்நகர், மம்சாபுரம், செண்பகத்தோப்பு ரோட்டிலும், சுந்தர்ராஜபுரம் மற்றும் விருதுநகர், நெல்லை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் கொய்யா சாகுபடியை விவசாயிகள் மேற்கொண்டுள்ளனர். நாட்டுக் கொய்யா குறைந்த அளவிலும், ஒட்டுக் கொய்யா ரகம் அதிகமாகவும் வளர்க்கப்படுகிறது. இந்த ஆண்டு கொய்யா மரங்களில் அதிகமாக காய் பிடித்துள்ளது.அதேசமயம் கூடுதல் விலையும் கிடைக்கிறது. கடந்த ஆண்டு பத்து கிலோ ரூ.300க்கு விலை போன கொய்யா இந்த ஆண்டு ரூ. 350 முதல் 400 வரை விலை போகிறது. விளைச்சலும் அதிகரித்து விலையும் அதிகரித்துள்ளதால் கொய்யா விவசாயிகள் மகிழ்ச்சி யடைந்துள்ளனர். தற்போது கோடை வெயிலில் பழங்கள் சில இடங்களில் வெம்பி உதிர்ந்து விடுகின்றன .கோடையில் மழை பெய்தால் காய்கள் அதிகளவில் பிடித்து விளைச்சல் மேலும் அதிகரிக்கும் என விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர். ராஜபாளையம் சந்தையில் சில்லரை விலையில் கிலோ ரூ.50 முதல் ரூ.60 வரை விற்கப்படுகிறது. கடந்த ஆண்டு சீசனில் கொய்யாப்பழம் சில்லரை விலைக்கு கிலோ ரூ. 40க்கு விற்றது.

## கோமாரி நோய் தடுப்பூசி முகாம்

சிதம்பரம் அருகே வலசக்காடு கிராமத்தில் அவதார் பிராணிகள் நல அமைப்பு சார்பில் கால்நடைகளுக்கான கோமாரி நோய் தடுப்பூசி முகாம் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு ஊராட்சித் தலைவர் ஆர்.இந்திரா தலைமை வகித்தார். துணைத் தலைவர் ராமலிங்கம் முன்னிலை வகித்தார். சோழத்தரம் கால்நடை மருத்துவர் எம்.கணேசன், மருத்துவ உதவியாளர் மகாராஜன், நங்குடி கால்நடை ஆய்வாளர் கௌசல்யா ஆகியோர், முகாமில் 500-க்கும் மேற்பட்ட மாடுகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடப்பட்டது. அவதார் பிராணிகள் நல அமைப்புத் தலைவர் சி.எஸ்.பாலசுந்தரம், செயலர் கே.சக்திவேல், துணைச் செயலர் வி.வெள்ளைராஜா, உறுப்பினர்கள் எம்.வேல்முருகன், எஸ்.வரதராஜன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# தினமலர்

### இன்றைய வேளாண் செய்திகள்

## கோபி சொசைட்டியில் ஏலம்ரூ.11 லட்சத்துக்கு விற்பனை

கோபி:கோபி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தில், 11 லட்சம் ரூபாய்க்கு வாழைதார்கள் மற்றும் தேங்காய்கள் ஏலத்தில் நேற்று விற்பனையானது. ஈரோடு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து, கோபி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்துக்கு, வாழைத்தார், தேங்காயை விற்பனைக்காக கொண்டு வருவகின்றனர். கதளி ஒரு கிலோ, 18 ரூபாய்க்கும், நேந்திரம், 23 ரூபாய்க்கும் விலை போனது. செவ்வாழை தார், 550 ரூபாய்க்கும், ரொபஸ்டா, 320 ரூபாய்,

தேன்வாழை, 500, ரஸ்த்தாளி, 300 ரூபாய், மொந்தன், 270 ரூபாய், பூவன், 300 ரூபாய், பச்சைநாடான், 250 ரூபாய்க்கு விலைபோனது. விற்பனைக்கு வந்த, 9,000 தார்கள், மொத்தம், 10 லட்சம் ரூபாய்க்கு ஏலம்போனது. தேங்காய் ஏலமும், நேற்று நடந்தது. மொத்தம், 8,000 தேங்காய் வரத்தானது. 7.80 முதல், 16 ரூபாய் என்ற விலை, ஒரு லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது.

## கோமாரி நோய் தடுப்பூசி முகாம்

சங்கராபுரம்: சங்கராபுரம் அரிமா சங்கம், கால்நடை பராமரிப்பு துறை சார்பில் இலவச கோமாரி நோய் தடுப்பூசி முகாம் காட்டுவனஞ்சூரில் நடந்தது. அரிமா சங்க தலைவர் விஜயகுமார் தலைமை தாங்கினார். முன்னாள் தலைவர்கள் வரதராஜன், துரை ராஜ், பாலசுப்ரமணியன், கார்த்திகேயன், அஸ்மதுல்லா, ஜனனி மகாலிங்கம், ராஜா முன்னிலை வகித்தனர். டாக்டர் கார்த்திகேயன் தலைமையில் கால்நடை ஆய்வாளர்கள் செந்தில்முருகன், கந்தன் ஆகியோர் 640 கால்நடைகளுக்கு கோமாரிநோய் தடுப்பூசி போட்டனர்.

## வறட்சியால் நிலக்கடலை சாகுபடி பாதிப்பு : கடலை எண்ணெய் விலை அதிகரிக்க வாய்ப்பு

தர்மபுரி:தர்மபுரி மாவட்டத்தில் நிலவும் கடும் வறட்சியால், நிலக்கடலை சாகுபடி கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளது. இதனால், கடலை எண்ணெய் விலை உயர வாய்ப்புள்ளதாக, விவசாயிகள் தெரிவித்தனர். தர்மபுரி மாவட்டத்தில், நெல், கரும்பு, தக்காளி, மரவள்ளி கிழங்கு, பருத்தி, மஞ்சள், துவரை, தென்னை, மா ஆகிய பயிர்கள், அதிகளவில் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. மேலும், நிலக்கடலை, சூரியகாந்தி, கொண்டக்கடலை, மல்லி, மற்றும் தோட்டகலைத்துறை பயிர்கள் மற்றும் மலர்கள் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.எண்ணெய் வித்து பயிரான நிலக்கடலை, தர்மபுரி, நல்லம்பள்ளி, பென்னாகரம், பாலக்கோடு,

காரிமங்கலம், மொரப்பூர், அரூர், பாப்பிரெட்டிப்பட்டி ஆகிய யூனியன்களில், 5,000 ஹெக்டேருக்கு மேல் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.குறைந்த கால பயிரான நிலக்கடலை சாகுபடியின் மூலம், விவசாயிகளுக்கு போதிய வருவாய் கிடைத்து வந்ததால், விவசாயிகள் ஆர்வத்துடன் நிலக்கடலையை சாகுபடி செய்து வந்தனர். கடந்தாண்டு, வட கிழக்கு பருவமழை ஓரளவுக்கு கை கொடுத்ததால், மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில், விவசாயிகள் நிலக்கடலை சாகுபடியில் ஈடுபட்டனர். வடகிழக்கு பருவமழையை தொடர்ந்து, கடந்த பிப்ரவரி முதல் வெயில் கொளுத்தி வருகிறதது. இதனால், ஏரி, குளங்கள் மற்றும் அணைகளின் நீர் மட்டம் வேகமாக சரிந்துள்ளது. விவசாய கிணறுகளின் நீர் மட்டமும் தொடர்ந்து சரிந்து வந்தது.கடந்த சில நாட்களாக மாவட்டத்தில், பெரும்பாலான பகுதிகளில் நிலக்கடலை அறுவடை நடந்து வருகிறது. நிலக்கடலை போதிய விளைச்சல் கிடைக்காததால், விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். நிலக்கடலை சாகுபடி செய்துள்ள விவசாயிகளுக்கு, அரசு நிவாரணம் வழங்க விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். இதுகுறித்து, தர்மபுரியை சேர்ந்த விவசாயிகள் கூறியதாவது:மாவட்டத்தில் போதிய மழை இல்லாததாலும், கோடைவெயில் காரணமாகவும் கிணறுகளில் தண்ணீர் மட்டம் வெகுவாக குறைந்தது. எனவே, நிலக்கடலைக்கு, போதிய பாசனம் செய்ய முடியவில்லை. மகசூலும் குறைந்து விட்டது.தர்மபுரி மாவட்டம் உட்பட, தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில், நிலக்கடலை சாகுபடி பாதிக்கப்பட்டுள்ளது. இதனால், நிலக்கடலை விலை சற்று அதிகரிக்க வாய்ப்புள்ளது. இதன் மூலம், கடலை எண்ணெய் விலையும் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

# தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### மணிலா உழவர் வயல்வெளி பள்ளி

விருத்தாசலம், :விருத்தாசலம் அடுத்த பெரியவடவாடி கிராமத்தில் மணிலா உழவர் வயல்வெளி பள்ளி நடந்தது. வேளாண்மை உதவி இயக்குனர் விஜயராகவன் தலைமை தாங்கினார். துணை வேளாண்மை அலுவலர் கிருஷ்ணன் முன்னிலை வகித்தார். அட்மா உதவி தொழில் நுட்ப மேலாளர் தேவேந்திரன் வரவேற்றார். கடலூர் வேளாண்மை துணை இயக்குனர் ஹரிதாஸ் கலந்து கொண்டு ஒருங்கிணைந்த முறையில் பூச்சி நிர்வாகம் மற்றும் பூச்சி மேலாண்மை பற்றி விரிவாக எடுத்துரைத்தார். உதவி வேளாண்மை அலுவலர் மகேஸ்வரி நன்றி கூறினார்.

### கோமாரி தடுப்பூசி முகாம்

கடலூர், : கடலூர் மாவட்ட கால்நடை பராமரிப்புத் துறை மூலம் கோமாரி தடுப்பூசி முகாம் கடந்த மார்ச் 1 முதல் மார்ச் 21ம் தேதி வரை நடைபெற்றது. விடுபட்ட கால்நடைகளுக்கு கோமாரி தடுப்பூசி முகாம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. கடலூர் முதுநகர், திருப்பாதிரிப் புலியூர் கால்நடை மருந்தகங்களின் கட்டுப்பாட்டில் உள்ள வசந்தராயன் பாளையம், கொடிக்கால்நகர், புருகீஸ்பேட்டை, வண்டிப்பாளையம், ஆலைக்காலனி, பாலன்காலனி பகுதிகளில் நேற்று வீடு வீடாகச் சென்று விடுபட்ட மாடு, கன்றுகளுக்கு கோமாரி தடுப்பூசிகள் போடப்பட்டன. காராமணிக்குப்பம் கால்நடை உதவி மருத்துவர் டாக்டர் முருகவேணி தலைமையில் கால்நடை ஆய்வாளர்கள் வீரக்குமார், வசந்தா, கால்நடை பராமரிப்பு உதவியாளர் மனோன்மணி, ஓய்வு பெற்ற கால்நடை ஆய்வாளர் ராஜமச்சேந்திரசோழன் ஆகியோர் தடுப்பூசி போடும் பணிகளை மேற்கொண்டனர். இதேபோன்று ராமாபுரம், கிழக்கு

ராமாபுரம் ஆகிய பகுதிகளில் கோமாரி தடுப்பூசி போடும் பணிகளும், கால் நடைகளுக்கு காப்பீடு செய்யும் பணிகளும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இப்பணிகளை ராமாபுரம் கால்நடை உதவி மருத்துவர் ஸ்டாலின் வேதமாணிக்கம் தலைமையில் கால்நடை மருத்துவ குழுவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

## <u>கடலூர் உழவர் சந்தையில் விற்பனை கிராம பகுதிகளில் சாகுபடி தீவிரம் உடல் வெப்பத்தை தணிக்கும் வெள்ளரிப்பழங்கள்</u>

கடலூர், :வெள்ளரி பழங்கள் தொன்மை சிறப்பு மிக்கவை, சங்க காலம் தொட்டு தமிழ் மக்களால் மிகவும் விருப்பமுடன் உண்ணப்பட்ட வெள்ளரி பழங்கள் இடையில் நடந்த விஞ்ஞான வளர்ச்சியிலும், நவீன உணவுப் புரட்சியிலும் காணாமல்போனது. ஆயினும் கடந்த கால உணவு பொருட் கள் மகத்துவம் அறிந்த மக்கள் மீண்டும் அவற்றை தேடித் தேடி பயன்படுத்தத் தொடங்கியுள்ளனர். அந்த பட்டியலில் வெள்ளரி பழங்கள் முக்கிய இடம் வகிக்கின்றன. வெள்ளரி பழ சாகுபடி மிக சிரமமாக இருந்ததாலும் தர்பூசணி பழ வருகையால் பின்னுக்கு தள்ளப்பட்டு மக்கள் மத்தியில் செல்வாக்கை இழந்ததாலும் பெரும்பாலான விவசாயிகள் வெள்ளரி பழச்செடி பயிரிடுவதை நிறுத்தி விட்டனர். ஆனால் தற்போது மக்கள் மத்தியில் வெள்ளரி பழத்திற்கு வரவேற்பு கூடியதை தொடர்ந்து விவசாயிகள் கடந்த சில ஆண்டுகளாக மீண்டும் வெள்ளரி பழச்செடி சாகுபடியை தீவிரப்படுத்தியுள்ளனர். கோடை காலத்தின் நன்கொடை யாக கருதப்படும் இப்பழம் லேசான இனிப்பு சுவையுடன் மென்மையான மாவுப்போல் சுவையாக இருக்கும். அதனுடன் வெல்லம் கலந்து கூழ் போல் சாப்பிட்டால் அவ்வளவு சுவையாக இருக்கும். வெள்ளரி பழங்கள் மணற்பாங்கான இடங்களில் வளரும் தன்மை கொண்டது. கடலூர் மாவட்டத்தில் புதுச்சத்திரம், வல்லம்படுகை, சின்னக்குமட்டி, பெரியகுமட்டி, சிலம்பி மங்கலம், பெரியப்பட்டு, கங்கனாங்குப்பம், நானமேடு உள்ளிட்ட பகுதிகளில் விளைவிக்கப்பட்டு வருகிறது. இதனை கண்ணும் கருத்துமாக வளர்க்கவேண்டும். பழங்களை

பனமட்டையில் வைத்து பாதுகாக்க வேண்டும். இல்லை என்றால் பழங்கள் மணலில் வெடித்து சிதறி விடும். இந்த பழம் சர்க்கரை நோயாளிகளுக்கு உகந்த மருத்துவ தன்மை கொண்டது. உடலின் வெப்பத்தை சமநிலையில் வைக்க உதவும். உடல்நீர் தன்மையை பாதுகாக்கும். ஜீரணம் மற்றும் ரத்த ஓட்டத்தை செம்மையாக்கும். இப்பழத்தின் விதைகளில் சித்த மருந்துகள் செய்ய பயன்படுகின்றன. தற்போது ஒரு பழம் ரூ 60 வரை விற்பனையாகிறது.விவரம் அறிந்தவர்கள் வெள்ளரி பழத்தை ஆசை ஆசையாய் வாங்கிச்செல்கின்றனர்.

## கோமாரி தடுப்பூசி முகாம் நிறைவு 98.6% மாடுகளுக்கு தடுப்பூசி போடப்பட்டது

கோவை, : தமிழகத்தில் மாடுகளுக்கு கோமாரி நோய் பரவுவதை தடுக்க கடந்த 1ம் தேதி முதல் 8வது சுற்று கோமாரி நோய் தடுப்பூசி போடும் பணி 21ம் தேதி வரை நடந்தது. அதன்படி, கோவை மாவட்டத்தில் உள்ள 2 லட்சத்து 42 ஆயிரத்து 775 மாடுகளுக்கு தடுப்பூசி போட திட்டமிடப் பட்டது. இதற்காக கால்நடை பராமரிப்பு துறையினர் சார்பில் 72 தனிக்குழு அமைக்கப்பட்டு மாடுகளுக்கு தடுப்பூசி போடும் பணி மேற்கொள்ளப்பட்டது. இம்முகாமில் நான்கு மாதங்களுக்கு மேல் உள்ள கன்றுகளுக்கும், சினை மாடுகளுக்கும் தடுப்பூசி போடப்பட்டது. தடுப்பூசி போடப்பட்ட மாடுகளுக்கு தனித்தனியாக அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது. ஒரு நாளைக்கு சராசரியாக 11,100 மாடுகள் வீதம் என மொத்தம் 2 லட்சத்து 42 ஆயிரத்து 432 மாடுகளுக்கு முகாம் மூலமாக தடுப்பூசி போடப்பட்டுள்ளது. அதவாது, 98.6 சதவீதம் மாடுகளுக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளது. இதில், விடுபட்ட மாடுகளுக்கு வரும் 31ம் தேதி வரை சிறப்பு முகாம் மூலம் தடுப்பூசிகள் போடப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது குறித்து கோவை மண்டல கால்நடை பராமரிப்பு துறை இணை இயக்குனர் தமிழ்செல்வன் கூறுகையில்�

கோவை மாவட்டத்தில் 98.6 சதவீதம் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசிகள் போடப்பட்டுள்ளது. மீதமுள்ள மாடுகளுக்கு வரும் 31ம் தேதி வரை தடுப்பூசி போட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நூறு சதவீதம் என்ற இலக்கை எட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது� என்றார்.

## திருச்செந்துறையில் வாழைத்தார் பொது ஏலம்

திருச்சி,: திருச்செந்துறை வணிக வளாகத்தில் வாழைத்தார் பொது ஏலம் நாளை நடை பெறுகிறது. ஸ்ரீரங்கம் தாலுகா, திருச்செந்துறையில் இயங்கி வரும் ஒருங்கிணைந்த வாழை வணிக வளாகத்தில் திருச்சி வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை சார்பில் வாழைத்தார் பொது ஏலம் (செவ்வாய்) நடைபெற உள்ளது. இதில் விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைப்பதோடு எந்தவித கமிஷன் இல்லாமல் உடனுக்குடன் பணம் பட்டுவாடா செய்யப்படுகிறது. வாழைத்தார் கொண்டு வரும் விவசாயிகள் அன்று காலை 11 மணிக்குள் முன்பதிவு செய்து கொள்ள வேண்டும். திருச்சி மாவட்டம், அந்தநல்லூர், மணிகண்டம், திருவெறும்பூர், லால்குடி, மண்ணச்சநல்லூர், முசிறி, தொட்டியம் வட்டாரங்களை சேர்ந்த விவசாயிகள் மட்டுமின்றி டெல்டா மாவட்ட விவசாயிகளும் வாழைத்தார்களை திருச்செந்துறை ஒருங்கிணைந்த வாழைவணிக வளாகத்துக்கு கொண்டு வந்து பொது ஏலத்தில் பங்கேற்கலாம்.

## துறையூரில் 25ம் தேதி பருத்தி ஏலம்

திருச்சி,: துறையூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் மறைமுக பருத்தி ஏலம் வரும் 25ம்தேதி நடக்கிறது. திருச்சி மாவட்டம் துறையூர் ஒழுங்குமுறை விற் பனை கூடத்தில் கடந்தாண்டு முதல் பருத்தி மறைமுக ஏலம் நடந்து வருகிறது. இதேபோல் இந்தாண்டில் தற்போது பருத்தி அறுவடை துவங்கியுள்ளது. இதனால் ஒவ்வொரு வாரமும் புதன்கிழமை தோறும் பருத்தி மறைமுக ஏலம் நடந்து வருகிறது. அதன்படி, மறைமுக பருத்தி ஏலம் வரும் (25ம்தேதி) காலையில் நடக்கிறது. இதில் துறையூர்,

உப்பிலியபுரம், தா.பேட்டை, முசிறி, மண்ணச்சநல்லூர் வட்டாரங்களில் பருத்தி அறுவடை செய்து கொண்டிருக்கும் விவசாயிகள் வந்து மறைமுக ஏலத்தில் பங்கேற்று பயன்பெற அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. அன்பில் மாரியம்மன் கோயிலில் 29ல் திருவிழா திருச்சி, : அன்பில் மாரியம்மன் கோயிலில் தேர்த்திருவிழா வரும் 29ம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கிறது. ஏப்ரல் 7ம் தேதி தேரோட்டம் நடக்கிறது. ஸ்ரீரங்கம் ரங்கநாதர் கோயிலின் உபகோயி லான அன்பில் மாரியம் மன் கோயிலில் ஆண்டுதோறும் தேரோட்டம் பங்குனி மாத கடைசி செவ் வாய் அன்று நடை பெறும். இந்தாண்டு பங் குனி கடைசி செவ்வாய் கிழமை யான ஏப்ரல் 7ம் தேதி தேரோட்டம் நடக்கிறது. அதனையொட்டி, கோயி லில் வரும் 29ம் தேதி கொடியேற்றத்துடன் தேர்த்திருவிழா தொடங்குகிறது. ஏப்ரல் 5ம் தேதி அம்மன் குதிரை வாகனத் தில் எழுந்தருளி வீதியுலா வந்து அருள்பாலிக்கிறார். 6ம்தேதி கண்ணாடி பல்லக்கில் எழுந்தருள் கிறார். விழாவின் முக்கிய நிகழ்ச்சியான தேரோட் டம் வரும் 7ம் தேதி நடக்கிறது.அன்று மாலை 4.30க்கு தேர்வடம் பிடித்து இழுக்கப்பட்டு தேரோடும் வீதிக ளில் வலம் வருகிறது. ஏற்பாடுகளை, கோயில் இணை ஆணையர் ஜெய ராமன், மேலாளர் விஜயன் மற்றும் கோயில் பணியாளர்கள் செய்து வருகின்றனர்.

## <u>நடுவலூரில் கால்நடை மருத்துவமனை அமைக்க அதிகாரி ஆய்வு</u>

துறையூர், : நடுவலூரில் கால்நடை மருத்துவமனை அமைக்க கால் நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குனர் ஆய்வு மேற்கொண் டார். துறையூர் அடுத்த நடு வலூர் ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளில் விவசாயி கள் மற்றும் கால்நடை வளர்ப்பவர்கள் பெரும்பகுதியினர் உள்ளனர். இவர் கள் தங்களது கால்நடைக ளுக்கு ஏற்படும் நோய்களுக்கு மருத்துவம் பார்க்க மிகவும் சிரமப் பட்டு வந் தனர். இந்நிலையில் நடு வலூர் பகுதியில் கிளை கால்நடை மருத்துவமனை அமைக்க, மாவட்ட கால் நடை பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குநர் செல்லசாமி

நடுவலூர் கிராமத்தில் நேரில் சென்று ஆய்வு செய்தார். மேலும் இதுசம்பந்தமாக ஊராட்சி மன்ற தலைவர் மோகனிடம் ஆலோசனை நடத்தினார். நிகழ்ச்சியில் முசிறி கோட்ட உதவி இயக்குநர் செல்வராஜ், வரதராஜ், கால்நடை உதவி மருத்துவர்கள் செந்தில்குமார், குணசேகர் ஆகியோர் உடனிருந்தனர்.

## தரமான விதை உற்பத்தி தொழில்நுட்ப பயிற்சி

பட்டுக்கோட்டை, : பட்டுக்கோட்டை வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் விதை மையம் மற்றும் நீர்வள நிலவள திட்டம் மூலம் நெல் மற்றும் பயறுவகை பயிர்களில் தரமான விதை உற்பத்தி தொழில்நுட்ப பயிற்சி நடந்தது. பயிற்சி துவக்கி வைத்து தரமான விதை தேவை மற்றும் அதன் முக்கியத்துவம் குறித்து வேளாண்மை ஆராய்ச்சி நிலைய தலைவரும், பேராசிரியருமான கணேச மூர்த்தி விளக்கம் அளித்தார். பல்வேறு பருவங்கள் மற்றும் ரகங்கள் குறித்து பேராசிரியர் சசிகுமார், நெல் மற்றும் பயறுவகை பயிர்களில் பூச்சிகள் மற்றும் நோய்களின் மேலாண்மை குறித்து பேராசிரியர் ராஜமாணிக்கம், உழவியல் தொழில்நுட்பம் பற்றி பேராசிரியர் நடராஜன், தரமான விதை உற்பத்தியின்போது விதை தூய்மையை பாதுகாக்க மேற்கொள்ள வேண்டிய உத்திகள் பற்றி பேராசிரியர் பாரதி ஆகியோர் விளக்கம் அளித்தனர். பயிற்சியில் பட்டுக்கோட்டை, பேராவூரணி, சேதுபாவாசத்திரம் பகுதிகளை சேர்ந்த 50 விவசாயிகள் பயன்பெற்றனர்.

## தஞ்சையில் 27ம் தேதி விவசாயிகள் குறைதீர் கூட்டம்

தஞ்சை, : தஞ்சை கலெக்டர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும நாள் கூட்டம் வரும் 27ம் தேதி நடைபெற உள்ளது. இதுகுறித்து கலெக்டர் சுப்பையன் விடுத்துள்ள செய்திகுறிப்பில், வரும் 27ம் தேதி காலை 10 மணிக்கு விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில் நடக்க உள்ளது. கூட்டத்தில் விவசாயிகளுக்கு புதிய தொழில் நுட்பம் குறித்த திட்ட விளக்கம் அளிக்கப்பட உள்ளது.

இதில் கலந்து கொள்ளும் முன்னோடி விவசாயிகள், விவசாய சங்க பிரதிநிதிகள் அனைவரும் நீர்பாசனம், கால்நடை கூட்டுறவு, மின்சாரம், வேளாண்மை பொறியியல் துறை, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம், தோட்டக்கலைத்துறை போன்ற விவசாயம் தொடர்புடைய கருத்துக்களை மட்டும் தெரிவிக்க வேண்டும். கூட்டத்தில் கருத்து தெரிவிக்க விரும்பும் விவசாயிகள் காலை 8.30 மணி முதல் 10 வரை கணினியில் தங்கள் பெயர் மற்றும் விபரத்தை பதிவு செய்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு வட்டத்திலும் பதிவு செய்துள்ள முதல் இரண்டு நபர்கள் கருத்து கூற அனுமதிக்கப்படுவார்கள். விவசாயிகள் விவசாய சங்க பிரதிநிதிகள் கலந்து கொண்டு கருத்துகளை தெரிவிக்கலாம் என்று தெரிவித்துள்ளார்.

## கால்நடை பராமரிப்பு பயிற்சி முகாம்

பாபநாசம், : பாபநாசம் விவேகானந்தா வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி மையம், தஞ்சாவூர் நபார்டு வங்கி சார்பில் கோவிந்த நாட்டுச்சேரி ஊராட்சி பட்டுக்குடியில் பசுமை உழவர் மன்றம் உதவியுடன் கால்நடை நோய் மற்றும் பராமரிப்பு விழிப்புணர்வு பயிற்சி முகாம் நடந்தது. பாபநாசம் கால்நடை உதவி மருத்துவர் செல்வகுமார், கால்நடை ஆய்வாளர் தனலட்சுமி, கால்நடை பராமரிப்பு உதவியாளர் முருகேசன் பங்கேற்றனர். பட்டுக்குடியில் 44 கால்நடை வளர்ப்போருக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. ஏற்பாடுகளை பட்டுக்குடி உழவர் மன்ற ஒருங்கிணைப்பாளர்கள் கருப்பையன், கணேசன் செய்திருந்தனர். சிறப்பு விருந்தினராக ஊராட்சி தலைவர் ஜனாவா, உறுப்பினர் முருகானந்தம் கலந்துகொண்டனர்.

# சிறு, குறு விவசாயிகள் சொட்டு நீர்ப்பாசனம் அமைக்க விண்ணப்பிக்கலாம் கலெக்டர் தகவல்

தூத்துக்குடி, : தூத்துக்குடி மாவட்டத்தில் சிறு, குறு விவசாயிகள் சொட்டு நீர்ப்பாசனம் அமைக்க விண்ணப்பிக்கலாம் என்று கலெக்டர் ரவிகுமார் தெரிவித்து உள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: தூத்துக்குடி மாவட்டத்தில் 100 சதவீதம் மானியத்தில் நுண்ணீர் பாசன திட்டம் சிறு, குறு விவசாயிகளுக்கு தோட்டக்கலை துறை மூலம் அமைத்துக் கொடுக்கப்பட்டு வருகிறது. தோட்ட கலை பயிர்களான பழங்கள், காய்கறிகள், மலர்கள், வாசனை பயிர்கள், வேளாண்மை பயிர்களான தென்னை, கரும்பு, பருத்தி, மக்காச்சோளம் ஆகிய பயிர்களிலும், சொட்டுநீர்ப்பாசன வசதி அரசு மானியத்துடன் செய்து தரப்படுகிறது. சிறு விவசாயிகள் சொட்டுநீர்ப் பாசனத்துக்கான பணி உத்தரவு வழங்குவதற்கு வரும் 24ம் தேதி வரை காலநீட்டிப்பு செய்து அரசு உத்தரவிட்டுள்ளது. ஆகையால் இந்த திட்டத்தில் பங்கு பெற விரும்பும் சிறு குறு விவசாயிகள் உடனடியாக தங்களது நில உடைமை ஆவணங்களான கம்ப்யூட்டர் பட்டா, அடங்கல், ரேஷன்கார்டு, புகைப்படம், நிலவரைப்படம், ஆகியவற்றை விண்ணப்பத்துடன் இணைத்து மாவட்ட கலெக்டர் அலுவலக வாசலில் அமைக்கப்பட்டு உள்ள சொட்டுநீர்ப்பாசன பெட்டியில் சேர்க்கவேண்டும். இந்த திட்டத்தில் புதுவாழ்வு திட்டத்தின் பல்வேறு குழுக்களின் உறுப்பினர்கள், மகளிர் சுய உதவிக்குழுக்களில் நில உடைமை உடைய மகளிருக்கு புதுவாழ்வு திட்ட முகமை மூலம் பெறப்படும் விண்ணப்பங்களுக்கு தகுதியின் அடிப்படையில் முன்னுரிமை அளிக்கப்படும். இவ்வாறுஅவர்தெரிவித்துள்ளார்.

**<u>நாசரேத்தில் நெல் கொள்முதல் நிலையம் திறப்பு</u>**

நாசரேத், : தூத்துக்குடி மாவட்டத்தில் விவசாயிகளின் நலன் கருதி 20 இடங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் அமைக்கப்படும் என கலெக்டர் ரவிகுமார் அறிவித்திருந்தார். முதல்கட்டமாக குரும்பூர், ஸ்ரீவைகுண்டம், ஆழ்வார்திருநகரி, நாசரேத், வசவப்பபுரம், இருளப்ப புரம், குலையன் கரிசல் உள்ளிட்ட 7இடங்களில் நெல்கொள் முதல் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. நாசரேத்தில் நெல் கொள்முதல் நிலையம் திறக்கப்பட்டுள்ளதால் நாசரேத் சுற்று வட்டார விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் சார்பில் நாசரேத்தில் அமைக்கப்பட்டுள்ள கொள்முதல் நிலையத்தில் நெல் படையல் இயந்திரத்தை ஆழ்வார்திருநகரி வேளாண்மை உதவி இயக்குநர் பாலசுப்பிரமணியன் துவக்கி வைத்தார். நிகழ்ச்சியில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக எழுத்தர் கலியப்பெருமாள், தென்கரை வியசாய சங்க செயலாளர் ராஜேந்திரன் உள்பட பலர் கலந்து கொண்டனர். நாசரேத் நெல் கொள்முதல் நிலையத்தில் மோட்டா ரக நெல் ஒரு கிலோவுக்கு ரூ.14.10ம், சன்ன ரக நெல் ரூ.14.70ம் நிர்ணயிக்கப் பட்டுள்ளது. இதனை நாசரேத் சுற்று வட்டார விவசாயிகள் வரவேற்றுள்ளனர்.

## இன்றைய வேளாண் செய்திகள்

## நீரும், விவசாயமும்




இந்தியாவில் அதிக அளவு நீர் தேவை உள்ள தொழில் விவசாயமாகும். கிட்டத்தட்ட 80 சதவீத நீர், விவசாயத்திற்கே பயன்படுத்தப்படுகிறது. இதற்கு அடுத்தபடியாக தொழிற் சாலைகள், வீட்டு பயன்பாட்டிற்கு நீர் தேவைப்படுகிறது. இந்தியாவில் தேவையான நீர் ஆதாரங்கள் இருந்த போதிலும் அவற்றை முழுமையாக பயன்படுத்திக் கொள்ள பல தடைகள் உள்ளன. உதாரணமாக இமயமலையில் உற்பத்தியாகும் கங்கை, பிரம்மபுத்திரா போன்ற ஜீவநதிகளில், மழை பெய்யும் போது பெருமளவு நீர் கடலுக்கு சென்று வீணாகிறது. இந்த நதிகளில் பெரிய நீர்த்தேக்கங் களை அமைக்க இயலாத நிலை உள்ளது. இதேபோல் தீபகற்ப இந்தியாவில் பாயும் பல ஆறுகளின் நீரை பயன்படுத்திக் கொள்வதில் சிறந்த திட்டமிடல் இல்லை. நெற்பயிர் அதிக அளவு நீர் உறிஞ்சும் பயிராகும். இந்தியாவில் ஒரு ஹெக்டேர் நிலத்தில் 2 டன், குறிப்பாக தமிழகத்தில் 3.5 டன் நெல் சாகுபடி செய்யப்படுகிறது. பிற நாடுகளோடு ஒப்பிடும்போது, இது மிகவும் குறைந்த அளவாகும். ஆஸ்திரேலியாவில் ஹெக்டேருக்கு 10 டன்னும், அமெரிக்காவில் 6.5 டன்னும், சீனாவில் 6 டன்னும் சாகுபடியாகின்றன. இந்தியாவிலும் சிறந்த நீர்ப்பாசன முறைகளையும், பிற தொழில்நுட்பங்களையும் பின்பற்றினால் இந்தியாவில் நெல் விளைச்சலை, தற்போது உள்ள நிலப்பரப்பிலேயே

மேலும் மூன்று மடங்கு பெருக்க முடியும். தமிழகத்தை பொறுத்தவரை பிற தென் மாநிலங்களை விட நீரின் தேவை மிக அதிகமாகும். ஏனெனில் கிடைக்கின்ற நீரின் அளவு தொடர்ந்து பற்றாக்குறையாகவே உள்ளது. விவசாயத்திலும் பல வழிகளில் நீர் வீணாகிறது. வாய்க்கால் அமைப்பதிலும், அவற்றை சரிவர பராமரிப்பதிலும் உள்ள குறைபாடுகளால் ஏராளமான நீர் கசிந்து உபயோகம் இல்லாமல் போவது, பாசன முறைகளில் தண்ணீர் சிக்கனத்தை பற்றி விவசாயிகள் கவனிக்காத நிலை, தண்ணீர் விடும் விதிமுறைகள் ஆகியவை முக்கிய காரணங்களாகும். வேளாண் விளைச்சலின் மேன்மைக்கு நீர் மேலாண்மை மிகவும் முக்கியமானதாகும். ஆனால் இதற்கான பல்வேறு தொழில்நுட்பங்கள் இன்னும் விவசாயிகளுக்கு முழுமையாக சென்றடையவில்லை. பல விரிவாக்கத் திட்டங்கள் இன்னும் ஏட்டளவிலேயே உள்ளன. அப்படியே செயல்பாட்டுக்கு வந்தாலும், ஒருசில செயல்திறன் மிக்க விவசாயிகளே அவற்றை அறிந்து கடைபிடிக்கிறார்கள். விவசாயத்தை முறைப்படுத்தவும், நீரின் தேவைகளை குறைக்கவும் சில வழிமுறைகளை தொடர்ந்து பின்பற்ற வேண்டும். ஆறுகளின் மூலம் கிடைக்கும் நீரை சேமித்தல், கால்வாய்ப்பாசன நீர் விரயத்தை தடுத்தல், நீர் பற்றாக்குறையுள்ள பகுதிகளில் நீரின் மூலம் சாகுபடியை தவிர்த்தல், விவசாயிகளுக்கு தொழில்நுட்ப கல்வியை அளித்தல் போன்ற செயல்பாடுகள் மூலம் நாட்டின் வேளாண்மைத் தொழிலை மிகவும் மேன்மையான தொழிலாக மாற்ற வழி ஏற்படும்.

## <u>கோடை சீசனுக்கு தயாராகும் நேரு பூங்கா</u>



கோடை சீசனை முன்னிட்டு கோத்தகிரி யில் உள்ள நேரு பூங்காவை புனரமைக் கும் பணியில் பூங்கா ஊழியர்கள் ஈடுபட்டு உள்ளனர்.

சுற்றுலாபயணிகள்

மலைகளின் அரசி என்று வர்ணிக்கப்படும் நீலகிரி மாவட்டம் சர்வதேச அளவில் சிறந்த கோடை வாச தலமாக திகழ்ந்து வருகிறது. ஊட்டியில் வருடந்தோறும் மார்ச், ஏப்ரல், மே மாதங்கள் கோடை சீசன் காலம் ஆகும். இந்த சீசன் காலத்தில் தினமும் ஆயிரக்கணக்கான சுற்றுலா பயணிகள் வருகின்றனர். நீலகிரிக்கு வருகை தரும் சுற்றுலா பயணிகள் ஊட்டியில் உள்ள சுற்றுலா தலங்களை கண்டு களித்து விட்டு குன்னூர், கோத்தகிரியில் உள்ள சுற்றுலா தலங்களுக்கும் சென்று வருகிறார் கள்.

நேருபூங்கா

கோத்தகிரி காமராஜர் சதுக்கம் அருகே நேரு பூங்கா உள் ளது. இந்த பூங்கா இயற்கை சூழலில் அமைந்து உள்ளதால் சுற்றுலா பயணிகளை வெகுவாக கவர்ந்து வருகிறது. இந்த நிலையில் கோடை சீசனை முன்னிட்டு டேலியா, பிரஞ் மேரி கோல்டு, பிகோனியா, பேன்சி, சால்வியா உள் ளிட்ட 40 ஆயிரம் மலர் செடிகள் நடவு செய்யப் பட்டன. இந்த மலர் செடிகள் நன்கு வளர பூங்கா ஊழியர்கள் உரமிட்டும், தண்ணீர் பாய்ச்சியும் வருகிறார்கள். இதுகுறித்து பூங்கா அதிகாரிகள் கூறியதாவது:- கோடை சீசனை முன்னிட்டு நேரு பூங்காவை அழகுபடுத்தும் பணியில் பூங்கா ஊழியர்கள் ஈடுபட்டு வருகிறார்கள். 40 ஆயிரம் மலர் செடிகள் நடவு

கோத்தகிரி நேரு பூங்காவில் ஆண்டுதோறும் காய்கறி கண்காட்சி நடத்தப்பட்டு வருகிறது. இதன்படி இந்த ஆண்டுக்கான காய்கறி கண் காட்சி வருகிற மே மாதம் 2 மற்றும் 3-ந் தேதி களில் நடைபெறுகிறது. மேலும் சுற்றுலாபயணி களை கவர்வதற்காக பல்வேறு வண்ணங்களில் மலரும் 40 ஆயிரம் மலர் செடிகள் பூங்காவில் நடவு செய்யப்பட்டு உள்ளன. இந்த மலர் செடிகள் கோடை சீசன் போது பூத்து குலுங்கும். மேலும், பூங்காவில் உள்ள சிறுவர்களுக்கான விளை யாட்டு உபகரணங்கள் மற்றும் புல்வெளிகளை சமன்படுத்தும் பணியில் ஊழியர்கள் ஈடுபட்டு வருகிறார்கள்.இவ்வாறுஅவர்கள்கூறினார்கள்.

<u>விவசாயிகளுக்கு ரூ.25 லட்சம் மதிப்பிலான வேளாண் கருவிகள்</u>

<u>கலெக்டர் நந்தகுமார் வழங்கினார்</u>



விவசாயிகளுக்கு ரூ.25 லட்சம் மதிப்பிலான வேளாண் கருவிகளை மாவட்ட கலெக்டர் நந்த குமார் வழங்கினார்.
குறைதீர்க்கும்கூட்டம்

ராமநாதபுரம் மாவட்ட மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் நந்தகுமார் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட வருவாய் அதிகாரி விசுவநாதன் முன்னிலை வகித்தார். நிகழ்ச்சியில் ராம நாதபுரம் மாவட்டத்தின் பல் வேறு பகுதிகளை சேர்ந்த பொதுமக்கள் முதியோர் உத வித்தொகை, இலவச வீட்டு மனை பட்டா, ரேசன்கார்டு, குடிநீர் வசதி, சாலை வசதி உள்ளிட்ட கோரிக்கைகள் குறித்து மனு கொடுத்தனர். முதுகுளத்தூர் தமிழ் சுவி ஷேச லுத்தரன் திருச்சபையின் சொத்து பாதுகாப்பு அதிகாரி சாம் ஜெபராஜ் ஸ்டீபன்சன் தலைமையில் ஏராளமா னோர் கலெக்டரிடம் அளித்த மனுவில் கூறியிருப்பதாவது:– 300 ஆண்டு கால பாரம்பரியம் மிக்க இந்த திருச்சபை திருச் சியை தலைமையிடமாக கொண்டு செயல்பட்டு வருகிறது. இந்த நிலையில் முதுகு ளத்தூரில் உள்ள இந்த திருச் சபைக்கு சொந்தமான ஆல யம், பள்ளிக்கூடம், 30 கடை கள் போன்ற ரூ.30 கோடி மதிப்பிலான சொத்துக்களை முன்னாள் பேராயர் உள்ளிட் டோர் போலி பத்திரப்பதிவு செய்து அபகரித்துள்ளனர். எனவே, இதுகுறித்து உரிய விசாரணை நடத்தி அந்த பத் திரப்பதிவை ரத்து செய்து திருச்சபை சொத்துக்களை மீட்க வேண்டும். இவ்வாறு மனுவில் கூறப்பட்டிருந்தது.
வேளாண்கருவிகள்

இந்த மனுவை பெற்றுக் கொண்ட கலெக்டர் இது குறித்து விசாரித்து உரிய நடவ டிக்கை எடுப்பதாக உறுதிய ளித்தார். நிகழ்ச்சியில் ராமநாத

புரம் மாவட்ட வேளாண் பொறியியல் துறையின் சார்பில் தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தில் ரூ.24 லட்சத்து 74 ஆயிரத்து 700 மதிப்புள்ள 27 வேளாண் கரு விகளை ரூ.11 லட்சத்து 43 ஆயிரத்து 470 மானியத்தில் 21 விவசாயிகளுக்கு கலெக்டர் நந்தகுமார் வழங்கினார். நிகழ்ச்சியில், வேளாண் பொறியியல் துறை செயற்பொறியாளர் யுவ ராஜ், கலெக்டரின் விவசாய நேர்முக உதவியாளர் கனக ராஜ், உதவி செயற்பொறியா ளர்கள் ராஜேந்திரன், சிதம்ப ரேசன், உதவி பொறியாளர் சிவக்குமார், இளநிலை பொறி யாளர் ராமர் ஆகியோர் உட னிருந்தனர்.

## <u>மழையால் சேதமான பயிர்களுக்கு இழப்பீடு வழங்க அரசு அனுமதி கலெக்டர் தகவல்</u>



தூத்துக்குடி, தூத்துக்குடி மாவட்டத்தில் மழையால் சேதம் அடைந்த வாழை, வெற்றிலை பயிர்களுக்கு இழப்பீடு வழங்க அரசு அனுமதி அளித்து இருப்பதாக கலெக்டர் ம.ரவிகுமார் தெரிவித்து உள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:–

<u>இழப்பீடு</u>

தூத்துக்குடி மாவட்டத்தில் கடந்த 2012–ம் ஆண்டு பெய்த மழையால் 137 எக்டர் பரப்பில் பயிரிடப்பட்டு இருந்த வாழை, வெற்றிலை பாதிக்கப் பட்டது. இதற்காக ரூ.10 லட்சத்து 27 ஆயிரம் இழப்பீடு கோரி அரசுக்கு அனுப்பப்பட்டு இருந்தது. தற்போது, அதற்கான அனுமதி கிடைத்து உள்ளது. சுகந்தலை, மேலஆத்தூர், சேதுக்கு வாய்த்தான், கீழ்ப்பிடாகை, வாழவல்லான், கொட்டாரக்குறிச்சி, ஆறுமுகமங்கலம் ஆகிய பகுதிகளை சேர்ந்த விவசாயிகளுக்கு இழப்பீடு தொகை வழங்கப்படும்.

கண்காணிப்புக்குழு

தூத்துக்குடி அருகே உள்ள கல்லூரியில் ஒரு மாணவி பாதிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக அண்ணா பல்கலைக்கழக டீன் நேரடியாக ஆய்வு செய்து உள்ளார். விரைவில் அறிக்கை மாவட்ட நிர்வாகத்துக்கு அளிக்கப்பட உள்ளது. இதே போன்று ஆதிதிராவிடர் மாணவ– மாணவிகளிடம் கல்வி கட்டணம் வசூலிப்பதை கண்காணிக்க குழு அமைக்கப்பட்டு உள்ளது. இது குறித்து கல்லூரி நிர்வாகத்தினரிடமும் விளக்கி கூறப்பட்டு உள்ளது. தூத்துக்குடி மாவட்டத்தில் கோடைகால நீர் தட்டுப்பாட்டை போக்க ரூ.50 லட்சம் அரசு ஒதுக்கி உள்ளது. இதன் மூலம் முன்னுரிமை அடிப்படையில் திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

இவ்வாறு மாவட்ட கலெக்டர் ம.ரவிகுமார் கூறினார்.

**திருச்சியில், மாதுளம் பழம் விலை 'திடீர்' உயர்வு ஒரு கிலோ ரூ.140-க்கு விற்பனை**



திருச்சியில் மாதுளம் பழம் விலை திடீரென உயர்ந்தது. ஒரு கிலோ ரூ.140-க்குவிற்பனையாகிறது.

வரத்துகுறைவு

திருச்சி காந்திமார்க்கெட்டில் மொத்த வியாபார பழகடைகள் ஏராளமாக உள்ளன. தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும், வெளி மாநிலங்களில் இருந்து பழ வகைகள் விற்பனைக்காக கொண்டு வரப்படுகின்றன. இங்கிருந்து திருச்சி மற்றும் பக்கத்து மாவட்டத்தை சேர்ந்த சில்லறை வியாபாரிகள் பழ வகைகளை வாங்கி சென்று கடைகளில் விற்பனை செய்வது உண்டு. பெரிய வியாபாரிகள் மொத்தமாக நேரடியாக கொள்முதல் செய்வார்கள். இந்த நிலையில் மாதுளம் பழம் விலை திருச்சியில் திடீரென உயர்ந்துள்ளது. கடந்த சில

நாட்களுக்கு முன்பு ஒரு கிலோ மாதுளம் பழம் ரூ.110 வரைக்கும் விற்பனையானது. தற்போது ரூ.30 அதிகரித்து ரூ.140-க்கு விற்கப்படுகிறது. இந்த விலையேற்றம் குறித்து பழ வியாபாரி ஒருவர் கூறுகையில், ''மாதுளம் பழம் பெங்களூருவில் இருந்து வருகிறது. கடந்த சில நாட்களாக மாதுளம் பழம் வரத்து குறைவால் விலை அதிகரித்துள்ளது''என்றார்.

ஆப்பிள்பழம்

மற்ற பழ வகைகள் சராசரி விலைக்கு விற்பனையாகிறது. இதில் ஒரு கிலோ ஆரஞ்சு பழம் ரூ.100-க்கும், நாக்பூர் வகை பழம் ரூ.60-க்கும், சப்போட்டா ரூ.20-க்கும், கருப்பு திராட்சை (சிட்லஸ்) ரூ.120-க்கும், பச்சை திராட்சை ரூ.70-க்கும், ஆப்பிள் (வாஷிங்டன்) ரூ.170-க்கும், டெல்லி ஆப்பிள் ரூ.160-க்கும் விற்கிறது. தர்பூசணி ஒரு கிலோ ரூ.12-க்கும், முலாம்பழம் ரூ.10-க்கும் விற்பனையாகிறது. சில்லறை கடைகளில் இவற்றின் விலைகளை விட சற்று கூடுதலாக உள்ளது. திருச்சியில் தற்போது வெயிலின் தாக்கம் அதிகமாக உள்ளதால் அதில் இருந்து தப்பிக்க பழவகைகளை பொதுமக்கள் அதிக அளவில் சாப்பிடுகின்றனர். மேலும் பழ ஜூஸ் வகைகளையும் வாங்கி குடிக்கின்றனர். ஜூஸ் வகைகளில் ஆப்பிள் ஜூஸ் ரூ.25-க்கும், சாத்துக்குடி ரூ.28-க்கும், மாதுளம் ரூ.30-க்கும், முலாம்பழம் ரூ.15-க்கும், திராட்சை ரூ.18-க்கும் விற்பனையாகிறது.

## வெள்ளகோவில் வாரச்சந்தையில் 80 டன் முருங்கைகாய் விற்பனைக்கு குவிந்தது



வெள்ளகோவில் வாரச்சந்தைக்கு வெள்ளகோவில் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதி விவசாயிகள் தங்கள் விளைநிலங்களில் விளைந்த

முருங்கைகாயை கொண்டுவந்து விற்பனை செய்வார்கள். அதன்படி இந்த வாரம் நடந்த வாரச்சந்தைக்கு மொத்தம் 80 டன் முருங்கைகாய் விற்பனைக்கு குவிந்தது. சந்தையில் கடந்த வாரம் ஒரு கிலோ முருங்கை காய் ரூ.7–க்கு விற்பனை ஆனது. இந்த வாரம் ஒரு கிலோ முருங்கைகாய் ரூ.5–க்கு வியாபாரிகள் வாங்கினர். தற்போது முருங்கைகாய் விளைச்சல் அதிகமாக உள்ளதால் விலை வீழ்ச்சி ஏற்பட்டு உள்ளது. முருங்கைகாய் விலை கடும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். சந்தையில் தக்காளி ஒரு கிலோ ரூ.10–க்கும், பெரிய வெங்காயம் ரூ.20–க்கும், சின்ன வெங்காயம் ரூ.15–க்கும், பச்சை மிளகாய் ரூ.65–க்கும், கேரட் ரூ.50–க்கும், பீட்ரூட் ரூ.30–க்கும், உருளைகிழங்கு ரூ.20–க்கும் மற்றும் கத்தரி, வெண்டை, பாகற்காய், புடலங்காய், பீர்க்கன் ஆகியவை கிலோ ரூ.20–க்கும் விற்பனை ஆனது.